## 2.10 2002–03 ஆம் ஆண்டிற்கான திட்ட செயல்பாட்டிற்கான தொகுக்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் திருத்தம் வெளியிடுதல்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.38 நாள் : 30.04.2003

படிக்க :

1) அரசு ஆணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி(மதி1) துறை நாள்.19.06.2002
2) அரசு ஆணை(நிலை) எண்.92, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.07.08.2002
3) திருவட்டார் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஹேமச்சந்திரன் பி.ஏ.பி.எல்., கடித நாள்.03.01.2003
4) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண்.ஆ4/33062/2002, நாள். 10.01.2003
5) ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண்.3144/2003/தி.5/நாள்.29.01.2003

**ஆணை**

திருவட்டார் சட்டமன்ற உறுப்பினர் படிக்கப்பட்டவை 3–இல் காணும் தனது கடிதத்தில் நாகர்கோவிலில் அமையவிருக்கும் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு 2002–2003 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் முன்னுரிமைப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.10/– இலட்சம் அளிக்க சிறப்பு அனுமதி வேண்டியுள்ளார். மேலும், மனித வாழ்வோடு தொடர்புடைய இப்பணியை முன்னுரிமை திட்டத்தில் சேர்க்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

2. இத்திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி இச்சட்டமன்ற உறுப்பினர் கோரியவாறு ஆசாரி பள்ளத்தில் கட்டப்படும் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்க இயலவில்லை எனவும், இருப்பினும் பொது மக்களுக்கு பயனுள்ள பணியாகையால் இப்பணியின் அவசியத்தை கருதி முன்னுரிமை பணிகளுக்குப் பதிலாக தேர்வு செய்யப்பட வேண்டிய பணிகளின் பட்டியலில் சேர்த்திட சிறப்பு அனுமதி வழங்குமாறும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் படிக்கப்பட்டவை 4–ல் உள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

3. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை ஏற்று இப்பணி பொதுமக்களுக்கு மிகவும் பயன்தரக்கூடிய பணியாகவும், அத்தியாவசியமான பணியாகவும் உள்ளதால் இத்திட்ட வழிகாட்டி நெறிமுறை ஆணையில் பத்தி 10(1) ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் பட்டியலில் மருத்துவமனை கட்டிடம் கட்டும் பணியும் சேர்க்கப்பட்டு திருத்திய ஆணை வெளியிடலாமென ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இப்பொருள் குறித்து கவனமாக ஆராய்ந்த பின் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்தினை ஏற்று அரசாணை நிலை எண்.75, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.19.06.2002ல் பத்தி 10(1)ல் குறிப்பிட்டுள்ள பணிகள் பட்டியலில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை / மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல் பணியையும் சேர்க்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

5. இதன்படி கீழ்வரும் திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

அரசாணை(நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள்.19.06.2002ல் பத்தி 10(1)ல்

'(உ) சமுதாயக் கூடம் கட்டுதல்' என்பதற்குப் பிறகு.

'(ஊ) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை / மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்'

என்று சேர்க்கப்படுகிறது. மேலும், '(அ) முதல் (உ) முடிய' என்பதற்குப் பதிலாக'(அ) முதல் (ஊ) முடிய' என மாற்றம் செய்யப்படுகிறது

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.879/FS/P/நாள்.04.03.2003) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்